ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2021.01.12

**ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் - முடிவுறுத்துவதற்காக தகைமைவாய்ந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றினை மேற்கொள்ளல்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 31(5)(ஆ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டை முடிவுறுத்துவதற்காக தகைமைவாய்ந்த நீதிமன்றமொன்றுக்கு விண்ணப்பத்தை மேற்கொள்ளுமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரை பணிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

2011ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தினதும் இயலாமை என்பன காரணமாக நாணயச் சபையானது 2018 சனவரி 02 அன்று கம்பனியின் பணிப்பாளர்களுக்கு பணிப்புரைகளை விடுத்து கம்பனியின் விவகாரங்களைத் மேற்பார்வை செய்வதற்கு முகாமைத்துவக் குழாமொன்றினை நியமித்தது.

கம்பனியினை புத்துயிரளிப்பதற்குப் பொருத்தமான முதலீட்டாளரை (முதலீட்டாளர்களை) கொண்டு வருவதற்கு ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினை நாணயச் சபை பணித்திருந்த போதிலும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க முதலீட்டு முன்மொழிவுகள் எதுவும் முன்வரவில்லை என்பதுடன் கம்பனியின் நிதி நிலைமை தொடர்ந்தும் சீர்குலைந்தது. மேற்குறித்தவற்றுக்கு மத்தியில் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் இன் வைப்புகளின் 30 சதவீதமானவை 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டன.

தொடர்ச்சியாக சீர்குலைந்துவருகின்ற நிதியியல் நிலைமை மற்றும் நீடித்து நிலைத்திருக்கத்தக்க புத்துயிரளிப்பு திட்டமொன்று கிடைக்கப்பெறாமை என்பவற்றைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது 2020 யூலை 13ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிதித் தொழில் சட்டத்தின் 31(1)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் வியாபாரத்தினை இடைநிறுத்துவதற்குத் தீர்மானித்தது.

இடைநிறுத்தல் காலப்பகுதியின் போது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு நாடு முழுவதுமுள்ள மக்கள் வங்கி கிளைகள் ஊடாக தொடங்கப்பட்டது. 2020 இறுதியளவில் மொத்தமாக 37,586 காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களில் 65 சதவீதமானோருக்கு காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர் ஒருவருக்கு ரூ.600,000 கொண்ட உயர்ந்தபட்சத் தொகை வரை மொத்தமாக ரூ.8,941.6 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய தொகையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் தகைமைபெறுகின்ற நட்டஈட்டின் ரூ.8,955.4 மில்லியனில்

99.9 சதவீதத்தினை உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், இடைநிறுத்தல் காலப்பகுதியின் போது கடன்களை அறவிடுதல் தொடர்ச்சியாக இடம்பெற்ற போதிலும் குறிப்பிடத்தக்களவு தொகை எதுவும் கம்பனியினால் அறவீடு செய்யப்படவில்லை.

மூலதன உட்செலுத்தலொன்றின் ஊடாக கம்பனியினை புத்துயிரளிப்பதற்கு நீடித்து நிலைத்திருக்கும் திட்டமொன்று கிடைக்கப்பெறாமை அத்துடன் தொடர்ச்சியான கடன்தீர்க்கவகையற்ற நிலைமை என்பவற்றைப் பரிசீலனையில் கொண்டு நாணயச் சபையானது நிதித்தொழில் சட்டத்தின் 31(5)(ஆ) பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டினை முடிவுறுத்துவதற்காக தகைமைவாய்ந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றை மேற்கொள்வதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரை பணிப்பதற்குத் தீர்மானித்தது. முகாமைத்துவக் குழாம், ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் விவகாரங்களை தொடர்ந்தும் முகாமைசெய்து முடிவுறுத்தல் செயன்முறையினை வசதிப்படுத்தல் வேண்டும்.

இதுவரையில் தமது நட்டஈட்டுக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளாத ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் தகைமையுடைய வைப்பாளர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் ரூ.600,000 வரை நட்டஈட்டு கொடுப்பனவினை இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டம் தொடர்ந்தும் கொடுப்பனவு செய்யும். மேலும், ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் எஞ்சியுள்ள வைப்பாளர்கள், முடிவுறுத்தல் செயன்முறையில் அவர்களது நிலுவைகளை கோருவதற்கு தகைமையுடையவர் ஆவர். எவ்வாறாயினும், பணிப்பாளர்களுக்கும் ஏனைய தவறிழைத்தோர்களுக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகள் எந்தவித தடங்கலின்றி தொடர்ந்தும் இடம்பெறும்.

ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் அனைத்து கடன் பெறுநர்களும் ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டிற்கான அவர்களது நிலுவைகளை ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் பெயரின் கீழ் பின்வரும் வங்கிக் கணக்கு ஊடாக மாத்திரம் உரிய காலத்தில் கொடுப்பனவு செய்யவேண்டுமெனவும் நிலுவைகளை மீளக் கொடுப்பனவு செய்யாமைக்காக அவர்களுக்கெதிராக ஏதேனும் சாத்தியமான வழக்காடல்களைத் தவிர்ப்பதற்கு அனைத்து கொடுப்பனவுகளுக்குமான பதிவுகளைப் பேணுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

| **வங்கி** | **கிளை** | **கணக்கு இலக்கம்** |
|---|---|---|
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | மருதானைக் கிளை | 2320007155 |

மேலதிக விபரங்களுக்கு:

| **நிறுவனம்** | **நோக்கம்** | **தொலைபேசி இலக்கம்** | **மின்னஞ்சல் முகவரி** |
|---|---|---|---|
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | வியாபார நடவடிக்கைகளின் முடிவுறுத்தல் தொடர்பாக | 011 2477504<br>0112398806<br>0112398595 | snbfi_query@cbsl.lk |

| | | | |
|---|---|---|---|
| தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் | இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் | 011 2477261 | dred@cbsl.lk |
| அழைப்பு நிலையம், இலங்கை மத்திய வங்கி | பொதுவான விசாரணைகளுக்கு | 011 2477966 | |
| ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்/ நாணயச் சபை மூலம் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழாம் | வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான அனைத்து விசாரணைகளுக்கும் | 011 7534200 | info@eti.lk |